பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 634 **நாள்: 31.10.2026**

சோழிங்கநல்லூர் மண்டலம், கண்ணகி நகர் குடியிருப்புப் பகுதியில் இன்று மேற்கொள்ளப்பட்ட தீவிர தூய்மைப்பணி, கொசு ஒழிப்புப் பணி, தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தும் பணி, மின்சாதனப் பொருட்கள் அகற்றும் பணிகளை தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்துப் பணிகளை ஆய்வு செய்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-196க்குட்பட்ட கண்ணகி நகர் குடியிருப்புப் பகுதியில் தீவிர தூய்மைப்பணி மற்றும் கொசு ஒழிப்பு பணி, தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்தும் பணி, மின்சாதன பொருட்கள் அகற்றும் பணி இன்று 31.10.2026 நடைபெற்றது. இந்த பணியை தெற்கு வட்டார துணை ஆணையர் திரு.அ.தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது கண்காணிப்புப் பொறியாளர் திரு.முரளி, மண்டல அலுவலர் திரு.ஜி.லோகேஸ்வரன், செயற்பொறியாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள், மண்டல நல அலுவலர், இளநிலை பூச்சியியல் வல்லுநர், துப்புரவு அலுவலர், சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த தீவிரத் தூய்மைப் பணியில் Sumeet Elko நிறுவனத்தைச் சார்ந்த 25 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் Premier நிறுவனத்தின் சார்பில் 16 தூய்மைப் பணியாளர்கள், கொசு ஒழிப்பு பணி (Fogging) மேற்கொள்வதற்கு 5 பணியாளர்கள், வாகனம் மூலம் புகைப்பரப்பும் பணி (vehicle mounted fogging) மேற்கொள்வதற்கு 2 பணியாளர்கள், மருந்து தெளிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு 5 பணியாளர்கள் மற்றும் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்துவதற்கு 13 பணியாளர்கள் ஆகியோர் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த சிறப்பு தூய்மைப்பணி மற்றும் கொசு ஒழிப்புப் பணியின் கீழ், மொத்தம் 42 தெருக்களில் உள்ள 5,800 வீடுகள் உள்ளடக்கப்பட்டு, தீவிர தூய்மைப்பணி, கொசு ஒழிப்புப் பணி மற்றும் தேவையற்ற பொருட்கள், மின்சாதனப் பொருட்களை அகற்றும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டன.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

Greater Chennai Corporation

Press Release

P.R. No.: 634 **Date: 31.10.2026**

The South Regional Deputy Commissioner, Mr. Aftab Rasool, I.A.S., inaugurated and inspected the intensive sanitation work, mosquito eradication work, removal of unwanted items, and removal of electrical appliances carried out today in the Kannagi Nagar residential area, Sholinganallur Zone.

The intensive sanitation work, mosquito eradication work, removal of unwanted items, and removal of electrical appliances were conducted today (31.10.2026) in the Kannagi Nagar residential area, coming under Ward-196, Sholinganallur Zone, Greater Chennai Corporation. These works were inaugurated and inspected by the South Regional Deputy Commissioner, Mr. Aftab Rasool, I.A.S.,

The inspection was attended by Superintending Engineer Mr. Murali, Zonal Officer Mr. G. Lokeswaran, Executive Engineers and Assistant Executive Engineers, Zonal Health Officer, Junior Entomologist, Sanitation Officer, and Sanitary Inspectors.

For this intensive sanitation work, 25 sanitation workers from M/s. Sumeet Elko and 16 sanitation workers from M/s. Premier were deployed. Additionally, 5 workers for mosquito eradication work (fogging), 2 workers for vehicle-mounted fogging, 5 workers for spraying chemicals, and 13 workers for removing unwanted items were engaged.

Under this special sanitation and mosquito eradication drive, a total of 5,800 houses across 42 streets were covered, and intensive cleaning, mosquito eradication, and the removal of unwanted and electrical items were carried out effectively.

Issued by: Joint Director / Public Relations Officer,

Greater Chennai Corporation.